2013 ஏப்ரல் 30]

இந்தியா முழுவதும் இன்றைக்குச் சப்ளை செய்யும் நிலைமையில் இருக்கிறார்கள். இந்தக் கிராமத்தில் இருக்கின்ற அந்தத் தொழில் முனைவோர்களை ஒருங்கிணைத்து, தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா அல்லது K.V.I.B. மூலமாக அவர்களுக்கு Market linkage உருவாக்கித் தரப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து ஏற்றுக்கொள்ளப்படும் என்றாலுங்கூட, அந்தத் தொழில் செய்பவர்களெல்லாம் ஒட்டுமொத்தமாக ஒருங்கிணைந்து, அந்த மாவட்டத்தில் இருக்கிற எங்கள் துறையின் இயக்குநர்களை அணுகினால், அவர்களுக்கு நிச்சயம் அந்தப் பணி செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 353, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**353—**

## அங்கன்வாடி மையம்

***19930—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

*மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, செண்பகத்தோப்பு ஆட்டுப் பண்ணையில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, செண்பகத்தோப்பு ஆட்டுப் பண்ணையில் புதிய*

அங்கன்வாடி மையம் தொடங்குவதற்குப் போதுமான மக்கள்தொகை மற்றும் குழந்தைகள் இல்லாத காரணத்தால் அங்கு புதிய அங்கன்வாடி மையம் அமைப்பதற்கு வழிவகை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, செண்பகத்தோப்பு செல்லும் சாலையில் அமைந்துள்ள ஆட்டுப் பண்ணை கிராமம் 30 குடும்பங்களைக் கொண்டது. இந்தப் பகுதியில் அரசுப் பள்ளிகள் ஏதும் இல்லாத நிலையில், இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 23 குழந்தைகள் 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள வள்ளலார் இல்லம் என்ற தனியார் தொண்டு நிறுவனத்தில் தற்போது கல்வி பயின்று வருகின்றனர். 5 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலையில், இந்தக் கிராமத்தைச் சேர்ந்த அனைத்து மக்களுமே ஆடு மேய்க்கின்ற தொழிலை மையமாகக் கொண்டு தொழில் செய்துவருகிறார்கள். எனவே, அந்தப் பகுதியிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் வர வேண்டுமென்று சொன்னாலும் 5 கிலோ மீட்டர் தூரம் வர வேண்டும். அதேபோல, செண்பகத்தோப்பு செல்ல வேண்டுமென்று சொன்னாலும்கூட, 5 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய நிலையில், இந்தக் கிராமத்தினுடைய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, அந்தக் கிராம மக்களுடைய நலன்களைப் பாதுகாக்கின்ற வகையில், அங்கே ஒரு புதிய அங்கன்வாடி மையம் அமைத்துத் தர மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய அங்கன்வாடி மையம் திறக்க வேண்டுமென்றால், ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் குறைந்தபட்சம் மக்கள்தொகை 400-ஆக இருக்க வேண்டுமென்றும், அதிகபட்சம் மக்கள்தொகை 800-ஆக இருக்க வேண்டுமென்றும் மத்திய அரசு ஓர் அளவுகோல் நிர்ணயித்திருக்கிறது.*

2013 ஏப்ரல் 30]

*அதனடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன செண்பகத்தோப்பு ஆட்டுப் பண்ணையில் அரசுக்கு வந்திருக்கிற தகவலின்படி, மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 27; மக்கள் தொகை 99; ஆண்கள் 50: பெண்கள் 49; மைய அரசின் அளவுகோலின்படி, ஆட்டுப் பண்ணை பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் தொடங்குவதற்கு விதியில் இடமில்லை. என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 23 குழந்தைகள் இருப்பதாக தகவல் தந்திருக்கிறார்கள். அப்படி 23 குழந்தைகள் தனியார் தொண்டு நிறுவனம் நடத்தக்கூடிய பள்ளியிலே போய் படிக்கிறார்கள் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஆய்வு செய்து, அவர்களின் கருத்துருவினைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. தமிழக மக்களுடைய தேவையை அறிந்து திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், இந்தக் கிராம மக்களுக்கு இதுவரை குழந்தைகளைப் பராமரிக்க ஏற்பட்டுள்ள சிரமங்களைப் போக்குகின்ற வகையில், இந்தக் கிராமத்தில், இந்த ஆண்டே அந்தப் பள்ளிக்கான புதிய அங்கன்வாடி மையம் கட்டுவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் சொந்த ஊர், அந்த ஊர்தான் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆகவே, அந்த ஊரில் அவருடைய உறவினர்கள், மூத்த குடிமக்கள் அங்கே வசித்து இருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்த இடம் உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, குழந்தைகளின் எண்ணிக்கையை குறிப்பறிந்து அவர்களின்*

தேவையைப் பூர்த்தி செய்கின்ற விதத்திலே உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 354, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**354—**

## கொப்பரைத் தேங்காய் கொள்முதல்

***17219—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராமநாதபுரம் மாவட்டத்தில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*இராமநாதபுரம் மாவட்டத்தில் குறைந்த அளவான 8,363 ஹெக்டேரில் மட்டுமே தென்னை பயிரிடப்பட்டுள்ளது. 636 இலட்சம் தேங்காய்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வருவதாலும், இதுவரை கொப்பரைத் தேங்காய் கொள்முதல் மையம் அங்கே தொடங்கப்படவில்லை. இருப்பினும், கொப்பரை வரத்தின் அடிப்படையில், தேவை ஏற்படும்பட்சத்தில் முறையான கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் பெறப்பட்டு,* TANFED *நிறுவனம்மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் மையம் தொடங்குவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1960-களிலே மத்திய, மாநில அரசுகள்*